ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2022/14 - 2017 ජූනි මස 06 වැනි අඟහරුවාදා - 2017.06.06
*2022/14 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (XV)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 23 (2) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2017, மே 31*

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2007 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்மேல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இரண்டாயிரத்துப் பதினைந்து, யூன் 09 ஆந் திகதிய 1918/8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1990, சனவரி 05 ஆந் திகதிய 591/18 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக கட்டளைச் சட்டம், அக்கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பந்தியில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(அ) அதன் (3) ஆம் உட்பந்தியில், விடயம் (iv) ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயங்களை இடுவதன் மூலம் :-

“(iv) கணிதத் துறை ;
(v) கணினி விஞ்ஞானத் துறை; ”; அத்துடன்

(ஆ) அதன் (3) ஆம் உட்பந்தியில், (v), (vi), மற்றும் (vii) விடயங்களை முறையே அந்த உட்பந்தியின் (vi), (vii) மற்றும் (viii) என்றவாறாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

*06-744*

1A - PG 3549 — 157 (2017/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.